## பாடம் 6. ஆராய்ந்திட வேண்டும்

வகுப்பு: IV

பாடம்: தமிழ்

### அ. வினாக்களுக்கு விடையளிக்க

**1. குதிரை ஏன் நாய்க்கு உதவி செய்ய நினைத்தது?**

காலில் அடிபட்டதால் நாய் நொண்டி நொண்டி நடந்து கொண்டிருந்தது. அதனால் குதிரை நாய்க்கு உதவி செய்தது.

**2.காவலர்கள், குதிரை மீது இருந்த நாயை ஏன் கீழே இறக்கிவிட்டனர்?**

நாய், குதிரையின் மேலே அமர்ந்துகொண்டு குதிரையிடம் விவாதம் செய்து கொண்டு சத்தமாகக் குரைத்தது. ஆதலால் காவலர்கள் நாயைக் கீழே இறக்கிவிட்டனர்.

### ஆ. நிறுத்தக் குறியிடுக

“அரசே, அதோ ஒரு நாயானது நடக்க முடியாமல் தத்தித்தத்திச் சென்று கொண்டிருக்கிறது. அந்த நாயை என் முதுகில் ஏற்றிக் கொண்டு, அது எங்கு செல்ல வேண்டுமோ அந்த இடத்தில் விட்டுவிடலாமா?” என்று கேட்டது.

### இ. ஒரே சொல் இரண்டுமுறை அடுத்தடுத்து வருமாறு சொற்றொடர் அமைத்து எழுதுக.

(எ.கா.) நாய் ஒன்று நொண்டி, நொண்டி நடந்தது.

1. தத்தித் தத்தி = குழந்தை தத்தித் தத்தி நடந்தது.
2. எழுதி எழுதி = கந்தன் எழுதி எழுதி பார்த்தான்.
3. திரும்பித் திரும்பி = குழந்தை திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே சென்றது
4. குனிந்து குனிந்து = குனிந்து குனிந்து புத்தகத்தை எடுத்து அடுக்கியதால் முதுகு மிகவும் வலிக்கிறது என்றான் கந்தன்.

### ஈ. குறிப்பைப் படி! விடையைக் கொடு!

1. பேச உதவுவது வாய்
   படுக்க விரிப்பது பாய்
   கனிக்கு முந்தை யது காய்
   காவல் காப்பது **நாய்**
2. வரியில் ஒன்று சுங்கம்
   கனிமத்தில் ஒன்று தங்கம்
   நாடுகளுள் ஒன்று வங்கம்

தமிழுக்கு மூன்று **சங்கம்**

3. உழவுக்கு உதவுவது ஏர்

ஊர்கூடி இழுப்ப து தே ர்

மரத்திற்கு தேவை வே ர்

நல்லதை உன்னிடம் **சேர்**

## உ. அகரமுதலி பார்த்துப் பொருள் அறிக

போலி - ஒன்றைப்போல இருத்தல்

பொறாமை - காழ்ப்பு

சவாரி - பயணம்

வருந்தியது - துன்படைந்தது

மரியாதை - நேர்மையான ஒழுக்கம்

## ஊ. சொற்களிலுள்ள பிழைகளை நீக்குக

மண்னர் - மன்னர்

குதிறைச் சவாரி - குதிரைச் சவாரி

உர்சாகம் - உற்சாகம்

சிறந்தவண் - சிறந்தவன்

மக்கலெள்ளாம் - மக்களெல்லாம்

கனைப்பொளி - கனைப்பொலி

இறக்கக் குணம் - இரக்கக் குணம்

கிராமங்கல் - கிராமங்கள்

## எ. விலங்குகளுக்குரிய ஒலிப்புகளை வட்டமிடுக.

1. குதிரை கனைக்கும்
2. சிங்கம் முழங்கும்
3. நாய் குரைக்கும்
4. புலி உறுமும்
5. யானை பிளிறும்







| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ல | க | க | னை | க் | கு | ம் | ன | ர |
| வ | ழ | மு | ழ | ங் | கு | ம் | அ | ம் |
| ந | டை | னை | வி | ழு | ம் | தி | ப | று |
| கு | ரை | க் | கு | ம் | சை | றா | மு | ளி |
| ம | று | கு | ரு | வி | லு | கே | ள் | பி |
| டு | ன | ம் | மு | று | உ | உ | டை | ழ |





**ஏ. கீழ்க்காணும் எடுத்துக்காட்டைப் போல எழுதுக.**

1. நான் உணவு -------------(உண்)

நான் உணவு உண்டேன் (இறந்த காலம்)

நான் உணவு உண்கிறேன் (நிகழ்காலம்)

நான் உணவு உண்பேன். (எதிர்காலம்)

| வ. எ | தொடர் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| 1 | இளவரசி பூ --ஸ்ர (தொடு) | இளவரசி பூ தொடுத்தாள் | இளவரசி பூ தொடுகின்றாள் | இளவரசி பூ தொடுப்பாள் |
| 2 | ஆடு புல் --- (மேய்) | ஆடு புல் மேய்ந்தது | ஆடு புல் மேய்கின்றது | ஆடு புல் மேயும் |
| 3 | நாங்கள் படம்----- (வரை ) | நாங்கள் படம் வரைந்தோம் | நாங்கள் படம் வரைகின்றோம் | நாங்கள் படம் வரைவோம் |
| 4 | கதிர் போட் டியில்---- (வெல் ) | கதிர் போட் டியில் வென்றான் | கதிர் போட் டியில் வெல்கின்றான் | கதிர் போட் டியில் வெல்வான் |
| 5. | மயில்கள் நடனம் ---- (ஆடு) | மயில்கள் நடனம் ஆடின | மயில்கள் நடனம் ஆடுகின்றன | மயில்கள் நடனம் ஆடும் |

**ஐ. அட்டவணையில் விடுபட்ட இடங்களை நிரப்புக**

| வ. எண் | வினைச் சொல் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| 1 | செய் | செய்தாள் | செய்கின்றான் | செய்வான் |
| 2 | பற | பறந்தது | பறக்கின்றது | பறக்கும் |
| 3 | படி | படித்தான் | படிக்கின்றான் | படிப்பான் |
| 4 | கேள் | கேட்டது | கேட்கின்றது | கேட்கும் |
| 5 | சொல் | சொன்னார்கள் | சொல்கின்றார்கள் | சொல்வார்கள் |

**ஒ. படங்களுக்குப் பொருத்த மான காலங்களை ப் பயன்படுத்தித் தொ டர் எழுதுக.**



- கண்ணன் ஏணியில் ஏறுகிறான்.



- மரத்திலிருந்து தென்னை ஓலைகளும் தேங்காய்களும் விழுந்திருந்தன.



- விமானத்தில் பயணிகள் ஏற செல்கின்றன.



- சிறுவன் ஓடுகிறான்



- ஆசிரியர் கரும்பலகையில் எழுதுகிறார்.



- சிறுமி மிதிவண்டி ஓட்டுகிறாள்.



- தாத்தா செய்தித்தாள் படிக்கிறார்.



- பேருந்து செல்கின்றது.



- சிறுவன் கதவைத் திறக்கின்றான்.

AKSHAYA ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL
KOSAVAPATTY
KNOWLEDGE IS POWER